<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>

<u>SC.110/2023</u>

<u>நாள்.19.01.2026</u>

**<u>அ.சா.2.  1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

அ.சா.1 மாதாராமன் எனது கணவர் என்றால் சரிதான். ராமலிங்கம் என்பவர் நீர்நிலை பகுதிகளில் உள்ள எனது வீட்டை இடிக்கக்கோரி மாதாராமன் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உயர்நீதிமன்ற உத்தரவு படி எனது வீடு இடிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு நீர்நிலை பகுதிகளில் உள்ள வீடுகளை இடிக்கக்கோரி எனது கணவர் மாதாராமன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உயர்நீதிமன்ற உத்தரவின் படி எங்கள் பகுதியில் உள்ள 150 வீடுகள் இடிக்கப்பட்டது என்று சொன்னால் வீடுகளை இடித்தார்கள். ஆனால் எத்தனை வீடுகள் என்று தெரியாது. நீர்நிலை புறம்போக்கில் உள்ள வீடுகளை இடிக்கும் போது அதை தடுத்த ரஜினிகாந்த் மற்றும் சில நபர்கள் மீது காவல் துறையில் தடுப்பு காவல் சட்டப்படி சிறையில் வைக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். வீடுகளை இடிக்கும்போது எதிரிகள் வீடுகளும் இடிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி செயல்களால் ஊர் பொதுமக்கள் அனைவரும் எனது கணவரின் மீது கோபமாக இருந்து வருகிறார்கள் என்றால் இருந்து வருகிறார்கள். எனது கணவரை அடித்த சமயத்தில் நான் எங்கு இருந்தேன்

என்றால் மதிலடியில் இருந்தேன். என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. இந்த குற்ற சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், அ.சா.1 எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் தன்னிச்சையாக கீழே விழுந்து அடிப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எனது கணவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரை அடித்தபோது அதிக நபர்கள் இருந்தார்கள். அவர்கள் யார் யார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. எனக்கும், எனது கணவருக்கும் ஊர் முழுக்க எதிரிகள் என்பதால் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் என் கணவர் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ நடந்தபோது நான் சென்று தடுத்தேனா என்றால் தடுத்தேன். எனக்கு காயங்கள் ஏற்பட்டதா என்றால் இல்லை. உண்மையிலேயே சம்பவ நாளில் சம்பவ இடத்தில் இருந்து எனது கணவரை எதிரிகள் அடித்தபோது தடுத்திருந்தால் எனக்கு அடிப்பட்டிருக்கும் என்றும், என் கணவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நடக்காத சம்பவத்தை பொறுத்து பொய்யாக அ.சா.1 எனது கணவர் என்பதால் அவருக்கு

ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:— இல்லை.</u>**

| |
|---|
| Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.<br><br>Subordinate Judge,<br>Thiruthuraipoondi. |